மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2020 ஆம் ஆண்டுஅக்டோபர் மாதம் 16 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.04/2020
அ.வ.எண்.109/2020

1. பச்சமுத்து
2. மன்னாதன்
3. சி.ராஜேந்திரன்
4. சின்னசாமி
5. பச்சமுத்து
6. மாது
7. மதியழகன்
8. ராஜேந்திரன்
9. பச்சமுத்து
10. சிங்காரம்
11. பாப்பாத்தி
12. ராஜேந்திரன்
13. சீனிவாசன்
14. சம்பத்
15. சின்னத்தம்பி
16. குமரேசன்
17. முருகன்
18. முருகேசன்
19. ரமேஷ்
20. பாலசுப்பிரமணியன்
21. அய்யண்ணன்
22. மகாலிங்கம்
23. சிதம்பரம்
24. தங்கதுரை
25. பிரபாகரன்
26. பிரம்மதேவன்
27. ரங்கநாதன்
28. குமரேசன்
29. ஜெகதீசன்
30. சேகர்
31. பிரகாஷ்
32. சேகர்
33. பாலகிருஷ்ணன்
34. பிரகாசம்
35. சேகர்
36. சௌந்தரராஜன்

37. பொன்னப்பன்
38. கோவிந்தராசு

. . . மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள்/உத்தேசதரப்பினர்கள்

/எதிராக/

1. மன்னாதன்
2. கே.கோவிந்தசாமி
3. கே.அர்ஜுனன்
4. கே.சேட்டு (எ) கே.முத்து
5. கே.குமார்
6. கே. சாத்தப்பன் (எ) கே.ராமகிருஷ்ணன்
7. ஜி.மணிவண்ணன்
8. எம்.இளங்கோ
9. வி.சத்தீஸ்வரன்
10. எஸ்.மணிவண்ணன்
11. என்.மதிவாணன்
12. ஜி.வைரமாணிக்கம்
13. சி.சதாசிவம்
14. எம்.ஜெகநாதன்
15. எம்.லோகநாதன்
16. எஸ்.ராதாகிருஷ்ணன்

...எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்/1 முதல் 16 ம் வாதிகள்

1. ஜி.பிரபாகரன்
2. ஆர்.தங்கமலர்
3. ஜி.பி.பிரியதர்ஷினி
4. எஸ்.தமிழழகன்
5. எம்.முத்துசாமி

...எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 ம் பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 12.10.2020 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள்/உத்தேசதரப்பினர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.நாராயணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்/1 முதல் 16 ம் வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.பி.ஆர்.காமராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.கேசவன் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் மற்றும் 1 முதல் 16 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு எழுத்துமூலமான வாதுரை, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், வாதுரை கேட்கப்பட்டும், இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 பிரிவு 10(2) மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்களை வழக்கில் 6 முதல் 44ம் பிரதிவாதிகளாக சேர்க்க கோரி மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

மனுதாரர்கள் ஆரிகவுண்டனூர் ஸ்ரீ வேட மாரியம்மன் திருக்கோவில் கட்டுமான பணிகளில் ஈடுபட்டு, கோவிலின் கும்பாபிஷேகத்தை மிகவும் பிரமாண்டமான முறையில் கோவிலின் பூர்வீக தர்மகர்த்தா பிரபாகரன் தலைமையில் செவ்வனே செய்து முடித்தனர். இந்நிலையில் மனுதாரர்களின் பெயரில் போலியாக கையொப்பங்களை சித்தரித்தும், துஷ்பிரயோகம் செய்தும் தற்காலிக உறுத்துக்கட்டளை மனுவிலும், நிரந்தர உறுத்துக்கட்டளை வேண்டி 1 முதல் 16ம்வாதிகள் தாக்கல் செய்த அசல் வழக்கு பிராது ஆவணங்களிலும், மனுதாரர்களது பெயர்களும், கையொப்பங்களும் பொய்யாகவும், உண்மைக்கு புறம்பாகவும் கூறி மேற்படி வழக்கை மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ளனர். வழக்கில் மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்த்து விசாரித்தால் மட்டுமே உண்மையையும், நியாயத்தையும் தெளிவாக எடுத்துரைத்து உண்மையை நீதிமன்றத்தில் நிலைநாட்ட முடியும். எனவே மனுதாரர்களை வழக்கில் 6 முதல் 44ம் பிரதிவாதிகளாக சேர்க்க கோரி மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 1 முதல் 16ம் எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(இ.ம.எண்.03/2020ல் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை இம்மனுவிற்கான எதிருரையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென குறிப்புரை தாக்கல் செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது)

1ம்பிரதிவாதி பூர்வீக தர்மகர்த்தா என கூறுவது பொய்யாகும். கோவிலை புதுப்பிக்கும் பணியினை ஆரிகவுண்டனூர் கிராமத்தினரும், கோவில்கமிட்டி உறுப்பினர்களும் சேர்ந்து தான் மேற்கொண்டனர். மனுதாரர்களின் கையெழுத்தை

போர்ஜரியாக போடப்பட்டுள்ளது என்பது பொய்யாகும். மனுதாரர்கள் தேவையான தரப்பினர்கள் என்று எந்தவொரு இடத்திலும் கூறவில்லை. மேலும் வழக்கில் கோரியுள்ள பரிகாரமானது எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மனுதாரர்கள்/வாதிகள் வழக்குகோவிலில் சாமி கும்பிடவும், சங்கல்பம் செய்யவும், சடங்குகள் செய்வதையும் சட்டத்திற்கு புறம்பாக தடுக்கக்கூடாது என கோரப்பட்டுள்ளது. மேற்படி பிரதிவாதிகள் மட்டுமே இடையூறு செய்ததால் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்களுக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோராததால் மனுதாரர்கள் தேவையற்ற தரப்பினர்கள் ஆவர். ஆகவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 முதல் 16 ம்எதிர்மனுதாரர்கள்/வாதிகள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>4) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் கோவிலின் பூர்வீக தர்மகர்த்தா பிரபாகரன் தலைமையில் ஆரிகவுண்டனூர் ஸ்ரீ வேட மாரியம்மன் திருக்கோவில் கட்டுமான பணிகளில் ஈடுபட்டு, கோவிலின் கும்பாபிஷேகத்தை மிகவும் பிரமாண்டமான முறையில் செவ்வனே செய்து முடித்தனர் எனவும், மனுதாரர்களின் பெயரில் போலியாக கையொப்பங்களை சித்தரித்தும், துஷ்பிரயோகம் செய்தும் தற்காலிக உறுத்துக்கட்டளை மனுவிலும், நிரந்தர உறுத்துக்கட்டளை வேண்டி 1 முதல் 16 ம்வாதிகள் தாக்கல் செய்த அசல் வழக்கு பிராது ஆவணங்களிலும், மனுதாரர்களது பெயர்களும், கையொப்பங்களும் பொய்யாகவும், உண்மைக்கு புறம்பாகவும் கூறி மேற்படி வழக்கை மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ளனர் எனவும், வழக்கில் மேற்கண்ட தரப்பினர்களாக சேர்த்து விசாரித்தால் மட்டுமே உண்மையையும், நியாயத்தையும்

தெளிவாக எடுத்துரைத்து உண்மையை நீதிமன்றத்தில் நிலைநாட்ட முடியும் எனவும், எனவே மனுதாரர்களை அசல் வழக்கில் 6 முதல் 44ம் பிரதிவாதிகளாக சேர்க்க கோரி மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1 முதல் 16ம்எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் 1ம்பிரதிவாதி பூர்வீக தர்மகர்த்தா என கூறுவது பொய் எனவும், கோவிலை புதுப்பிக்கும் பணியினை ஆரிகவுண்டனூர் கிராமத்தினரும், கோவில்கமிட்டி உறுப்பினர்களும் சேர்ந்து தான் மேற்கொண்டனர் எனவும், மனுதாரர்களின் கையெழுத்து போர்ஜரியாக போடப்பட்டுள்ளது என்பது பொய் எனவும், மனுதாரர்கள் தேவையான தரப்பினர்கள் என்று எந்தவொரு இடத்திலும் கூறவில்லை எனவும், மேலும் மனுவில் கோரியுள்ள பரிகாரமானது பிரதிவாதிகளுக்கு எதிராக எதிர்மனுதாரர்கள்/வாதிகள் வழக்குகோவிலில் சாமி கும்பிடவும், சங்கல்பம் செய்வதையும், சடங்குகள் செய்வதையும் சட்டத்திற்கு புறம்பாக தடுக்கக்கூடாது என கோரப்பட்டுள்ளது எனவும், மேற்படி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மட்டுமே இடையூறு செய்ததால் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், மனுதாரர்கள்/ உத்தேசதரப்பினர்களுக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோராததால் மனுதாரர்கள் தேவையற்ற தரப்பினர்கள் ஆவர் எனவும், ஆகவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 முதல் 16ம்எதிர்மனுதாரர்கள்/வாதிகள் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது. 17 முதல் 22ம்எதிர்மனுதாரர்கள் இம்மனுவிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என்பதால் எதிருரை தாக்கல் செய்ய அனுமதிக்கப்படவில்லை.

(iii) 1 முதல் 16ம் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இ.ம.எண்.03/2020 மற்றும் 04/2020 ஆகியவைகளுக்கு பொதுவான எழுத்துமூலமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(iv) மனுதாரர்கள் வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் மனுதாரர்கள் அசல்வழக்கிற்கு தேவையான தரப்பினர்கள் எனவும், எனவே மனுவை அனுமதிக்க வேண்டுமென வாதிட்டார். 1 முதல் 16ம் எதிர்மனுதாரர்கள்/வாதிகளின் வழக்கறிஞர் மனுதாரர்கள்

தேவையற்ற தரப்பினர்கள் எனவும், ஆகவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கீழ்கண்ட முன்தீர்ப்பினை மேற்கோள் காட்டி வாதிட்டார்.

1992(2) Supreme Court Cases 524

Ramesh Hirachand Kundanmal Vs. Municipal Corporation of Greater Bombay and Others

"The Court is empowered to join a person whose presence is necesary for the prescribed purpose and cannot under the rule direct the addition of a person whose presence is not necessary for that purpose.

(v) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக 1 முதல் 16 ம் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் வழக்குகோவிலில் சாமி கும்பிடுவதையும், சங்கல்பம் செய்வதையும், சடங்குகள் செய்வதையும் சட்டத்திற்கு முரணாக தடுக்கக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளது தெரியவருகிறது. மேற்படி முன்தீர்ப்பின் படிக்கு மனுதாரர்கள் இவ்வழக்கில் தேவையான தரப்பினர்களா என்பதை பரிசீலனை செய்ததில் வழக்குரை பத்தி 10 ல் கடந்த 27.07.2020 லும், பல்வேறு தேதிகளிலும் 17 முதல் 22 ம் எதிர்மனுதாரர்களும்/பிரதிவாதிகளும் மற்றும் பல சமூக விரோத தெரியாத நபர்களும் மனுதாரர்களை கோவிலுக்குள் செல்லக்கூடாது என தடுத்ததாக கூறியுள்ளனர். எந்தவொரு இடத்திலேயும் மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள் இடையூறு செய்வதாக கூறவில்லை. ஆகவே மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள் இல்லாமலேயே அசல் வழக்கை தீர்மானிக்க முடியும் என்பதால் மனுதாரர்கள் தேவையற்ற தரப்பினர்கள் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

(vi) இ.ம.எண்.02/2020 யை யாருக்கு எதிராக தாக்கல் செய்ய வேண்டும் என்கிற உரிமை (Dominus Litis) அந்த மனுவை தாக்கல் செய்த எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு உள்ள நிலையில் மனுதாரர்களை வழக்கில் சேர்க்க தேவையில்லை என 1 முதல் 16 ம் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் கூறியுள்ளனர். இந்நிலையில் அசல் வழக்கில் மனுதாரர்களுக்கு எதிராக 1 முதல் 16 ம் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் எவ்வித பரிகாரத்தையும் கோரவில்லை. ஆகவே மனுதாரர்கள் இவ்வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

(vii) மனுவை கவனமாக பரிசீலனை செய்ததில் மனுதாரர்கள் என்ன உரிமையின் அடிப்படையில் வழக்கில் தரப்பினர்களாக தங்களை சேர்க்க வேண்டும் என்பதற்கும், மனுதாரர்கள் எவ்வாறு தேவையான தரப்பினர்கள் என்பது குறித்து மனுவில் கூறப்படவில்லை. மேலும் மனுதாரர்களின் கையெழுத்தை போர்ஜரியாக போட்டுள்ளனர் என்பதை நிரூபிக்க எந்தவொரு சான்றாவணத்தையும் முன்னிலைப்படுத்தவில்லை. இந்நிலையில் 17 முதல் 22 ம்எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தான் 1 முதல் 16 ம்எதிர்மனுதாரர்கள்/வாதிகளை இடையூறு செய்ததாக வழக்கில் கூறியுள்ள நிலையில் இம்மனுவின் மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள் இல்லாமலேயே வழக்கினை தீர்மானிக்க முடியும் என்பதால் மனுதாரர்கள் தேவையான தரப்பினர்கள் இல்லை என முடிவு செய்து இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனு எதிர்மனுதாரர்கள்/வாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.